வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 256/2021

வழக்கு சாட்சி LW5 / PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | சுப்பிரமணியம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 45 |

தேதி 03.12.2024

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் கல்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது. நான் சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.

கடந்த 20.09.2019 இரவு 8.00 மணியளவில் எதிரி ஜிப்ஸி வாகனத்தில் வந்த போலீசாருடன் தகராறு செய்ததாக போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அங்கு சென்றபோது என்னிடம் சாட்சியாக பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் இல்லை. மேற்படி கையொப்பத்தினை செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.